திருமதி ர. சுபா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவாசல் ஒன்றியத்திற்குட்பட்ட புல்லங்குறிச்சி ஊராட்சி மற்றும் சதாசிவபுரம் ஊராட்சி ஆதி திராவிட மக்கள் வசிக்கும் பகுகளாகும். இங்கு 2 அங்கன்வாடி மையங்கள் இயங்கி வருகின்றன. இந்த அங்கன்வாடி மையங்கள் செயல்படும் கட்டடங்கள் மிகவும் பழமையான கட்டடங்களாக இருப்பதனால், அந்த 2 ஊராட்சிகளின் அங்கன்வாடி மையங்களுக்கு அதிநவீன கட்டடங்கள் கட்டித் தர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலேயிருந்து கட்டடம் கட்டிக்கொள்வதற்கு அவர்களுக்கு அதிகாரத்தை வழங்கியிருக்கிறார்கள். அந்த அதிகாரத்தைப் பயன்படுத்தி அவர்கள் கட்டிக்கொள்ளலாம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10-20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 259, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.

259—

நேரடிக் கொள்முதல் நிலையம்

***13099—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், கல்லாபுரம் கிராமத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

2014 ஜூலை 25]

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், அமராவதி பாசனப் பகுதி, கல்லாபுரம் கிராமத்தில் நெல் கொள்முதல் பருவம் 2011-2012-ல் நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்கப்பட்டு, அதன்வாயிலாக, 650 மெட்ரிக் டன் அளவிற்கு விவசாயிகளிடமிருந்து நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும், நடப்பு கொள்முதல் பருவத்திலும், கல்லாபுரம் கிராமத்தில் நெல் கொள்முதல் நிலையம் திறக்கப்பட்டு, 28 மெட்ரிக் டன் அளவிற்கு நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என்பதையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லைப் பெரியாறு மற்றும் காவேரி பிரச்சினைகளில், தமிழகத்தின் உரிமையை மீட்டு, விவசாயிகளின் காவல் தெய்வமாக விளங்கும் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல், நேரடி நெல் கொள்முதல் நிலையம் அமைக்க வேண்டுமென்று ஏற்கெனவே கேட்டபோது, மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு அதைக் கொடுத்தது. தற்போது கடுமையான வறட்சியின் காரணமாக, அங்கே அது நிறுத்தப்பட்டிருந்தாலும்கூட, வருங்காலத்தில் வறட்சி நீங்கி, வரக்கூடிய காலகட்டங்களிலே, அங்கே தொடர்ந்து அந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தை நடத்துவதற்கான வாய்ப்பினை உருவாக்கித் தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் மூலக் கேள்விக்குச் சம்பந்தப்பட்ட இன்னொரு கேள்வியைக் கேட்க விரும்புகிறேன். மடத்துக்குளம் வட்டம், புதியதாக உருவாக்கப்பட்ட ஒரு வட்டமாகும். உடுமலைப்பேட்டை, மடத்துக்குளம் ஆகிய இரண்டு வட்டங்களை

உள்ளடக்கிய பகுதிகளில், நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் மூலமாக, இப்போது பொருட்கள் வழங்கப்பட்டு வருகின்றன. புதிதாகப் பிரிக்கப்பட்ட மடத்துக்குளம் வட்டத்திலே, Marketing Society-க்குச் சொந்தமாகத் தேவையான இடம் இருக்கின்ற காரணத்தினால், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகக் கிடங்கினை அங்கே உடனடியாக அமைப்பதற்கு உரிய ஏற்பாடுகளைச் செய்து தர முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2013-2014 கொள்முதல் பருவத்தில், விவசாயிகள் கொண்டுவரும் நெல் முழுவதையும் கொள்முதல் செய்வதற்கு ஏதுவாக, தேவைப்படும் இடங்களில் எல்லாம், அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும் உத்தரவிட்டிருக்கிறார்கள். மத்திய அரசு நிர்ணயித்த குறைந்தபட்ச ஆதார விலைக்கும் மேல் ஊக்கத் தொகையாக, சன்ன ரக நெல்லுக்குக் குவிண்டால் ஒன்றுக்கு 70 ரூபாயும், சாதாரண ரக நெல்லுக்கு 50 ரூபாயும் வழங்குவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கருணை உள்ளத்தோடு உத்தரவிட்டிருக்கிறார்கள்.*

இதன்படி திருப்பூர் மாவட்டத்தில் மடத்துக்குளம், கணியூர், வெள்ளக்கோவில், பழையகோட்டை, முத்தூர்வேலம்பாளையம், நத்தக்காடையூர், முத்தூர்கமிட்டி, பரஞ்சேர்வழி, அலங்கியம் ஆகிய 10 இடங்களில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, இன்றுவரை 4,546 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டு, 31,62,000/- ரூபாய் ஊக்கத் தொகையும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். விவசாயிகளிடமிருந்து கோரிக்கைகள் வருகின்றபோது, அங்கு நெல் வரத்து இருக்குமாயின், உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம்

2014 ஜூலை 25]

திறக்கப்படும் என்பதனையும் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வி ஒன்றைக் கேட்கிறேன் என்று மாண்புமிகு மூத்த உறுப்பினர் அவர்களே சொல்லி, இங்கே மூலக் கேள்விக்குத் தொடர்பில்லாத ஒரு கேள்வியை எழுப்பியிருக்கின்றார்கள். புதிதாகத் தொடங்கப்பட்டிருக்கின்ற எந்த வட்டமாக இருந்தாலும், அந்த வட்டத்திற்கு உடனடியாக பொது விநியோகத் திட்டத்தின்மூலம் வழங்கப்படுகின்ற பொருட்களைச் சேமித்து வைப்பதற்கான கிடங்குகளைக் கட்டுவதற்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கிறார்கள். இருந்தாலும், தற்போது உடனடியாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கையின்படி, அங்கு சொந்தக் கட்டடம் கட்டும் வரையில், மடத்துக்குளம் வேளாண் விற்பனைச் சங்கக் கட்டடத்தில் பொது விநியோகத் திட்டத்தின்மூலம் விநியோகிக்கப்படும் பொருட்களைச் சேமித்து வைத்து, நியாய விலைக் கடைகளுக்கு நகர்வு செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனையும் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு அவர்கள்.*

திரு. சி. சண்முகவேலு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் என்னுடைய நன்றியைக் கூறி விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

திரு. எம். ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஆனைமலை, கோட்டூர் ஆகிய இடங்களில் நெல் கொள்முதல் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுக்குமா எனத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல் வரத்து இருக்குமாயின், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆணையைப் பெற்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்த இடங்களில் உடனடியாக நேரடி நெல் கொள்முதல் நிலையம், திறக்கப்படும் என்பதனை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 260, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

260—

குளிர்சாதனப் பேருந்து

***34372—திரு. வி. சோமசுந்தரம்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காஞ்சிபுரத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 10-25

மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரத்திலிருந்து திருப்பதிக்கு குளிர்சாதனப் பேருந்து இயக்க மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உத்தரவு பெற்று, ஆய்வு செய்து, பயணிகளுடைய எண்ணிக்கை அதிகம் இருக்கும்பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.*